தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஉ } விய—வைகாசி 1946—மே { மலர் உ

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

கரந்தைக் கவியரசு மணிவிழா.

கரந்தைக் கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்களைத் தமிழ்ப்புலவர் உலகம், தமிழ் மாணவர் உலகம் முதலாய தமிழ்த் திருமக்கள் உலகம் நன்கறியும். இவர், தஞ்சை மாநாட்டினைச் சார்ந்த மோகனூர் என்ற ஒரு சிற்றூரில் பிறந்து, தம் அரிய முயற்சியால், தமிழ்ப் புலமை எய்தித் தமிழ்த் தொண்டாற்றி வருபவர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தொண்டுகள்.

2. தமிழ்மகனார், திரு. வே. இராதாகிருட்டினவேள், B. A., கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய ஞான்று, அவர்க்குத் துணைநின்ற அரிய நண்பர்களில் நம் கவியரசு ஒருவர். சங்கத்து ஆண்டறிக்கைகளைத் தொடக்கமுதல் காண்போர், இவர், முதலாண்டில் சங்கத்தின் துணைத்தலைவர் எனத்தோன்றி, அதுமுதல் என்றும் உறுப்பினர் எண்ணில் இரண்டாவதாகநின்று, பற்பலஆண்டுகள், அமைச்சர், நிறைவேற்றுக் கழக உறுப்பினராகித் தொண்டு செய்திருப்பதும், தமிழ்ப் பொழிலின் தொடக்க முதலாகப் பல்லாண்டுகள், அதன் தொண்டராகிப் பணியாற்றி வந்திருப்பதும், தாம் உயர் நிலைப்பள்ளி, கல்லூரிகளின் வேலைபற்றி வெளியூர்களை அடைந்திருந்தகாலத்தும், வேண்டுங் காலங்களிலெல்லாம் கரந்தை வந்து, சங்கத்தொண்டுகள் செய்திருப்பதும், நன்கு உணர்வர். ஐயாற்று அரசர் கல்லூரி வேலையினின்று விடுதிபெற்றகாலை, தம்மை விரும்பிய திருப்பதிக் கல்லூரியின் வேலையை விட்டுக், கரந்தைப் புலவர் கல்லூரியின் தொண்டாற்றி வந்துள்ளார். இவர்கள் சங்கத்திற்குச் செய்திருக்கும் புலமைத் தொண்டுகள் அறிஞர் உலகம் அறிந்து போற்றிவருவன.

உயர்நிலைப்பள்ளி, கல்லூரிகளின் தொண்டுகள்.

3. நம் கவியரசுஅவர்கள், எங்கும், எவ்வித வேண்டுகோளும் செய்ததின்றியே, பள்ளி, கல்லூரிகளின் புரவலர்களால், முதனிலை ஆசிரியராக விரும்பி யழைக்கப் பெற்றாராகி, உயர்நிலைப்பள்ளியில்

பன்னீராண்டும், கல்லூரிகளில் பதினாறாண்டும் தமிழ்த்தொண்டு புரிந்துள்ளார். இவர் ஆற்றும் கல்வித் தொண்டுகளால் மாணவர்கள் எய்தும் தெளிவு மகிழ்வுகளையும், உணவு இல்லத் தலைமை முதலியனகொண்டு, மாணவர்களைப் புரக்கும் நெறிகளால் அவர்கள் எய்திய நலம், நன்னெறிகளையும், அவர்தம் மாணவராகிப் புலமையுற்றோரும், கல்விச்சாலைகளின் தலைமையுற்றோரும், வேறு சிறப்பு நிலைகள் எய்தியோருமாகிய பற்பலர், பல அவைகளிலும் புகழ்ந்து கூறிவருதலை அறிஞர் உலகம் நன்கு அறியும்.

பொதுத் தொண்டுகள்.

4. இவர் நகைச்சுவை மலிந்த உரைகளால் தமிழ் நாட்டின் பற்பல விடங்களிலும் அவைத்தலைமை தாங்கியும், விரிவுரை இயற்றியும் தமிழ்ப் புலவர் உலகத்தை மகிழ்விப்பர். மிக்க இளம் பருவ முதல் சுவை மலிந்த செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்று இயற்றிய ஆசானாற்றுப்படை, இன்பப்பத்து, பிணிப்பத்து, வறுமைப் பத்து முதலாய எண்ணிறந்த செய்யுளாக்கம், மணிமேகலை, சிலப்பதிகார நாடக உரைநடை நூல்கள், தெய்வச்சிலையார் உரை, காரைக்கால் அம்மையார் புராணஉரை, நாவலர் பண்டிதர் நாட்டாரவர்களுடன் இணைந்து இயற்றிய அகநானூற்று உரை, மற்றும் இவர் இயற்றியுள சங்க இலக்கிய உரைகள் (வெளிவர வேண்டியன) சில, முதலாய இவர்தம் தாய் மொழித் தொண்டுகள் புலவர் உலகம் அறிந்தன.

5. நம் கவியரசு அவர்கள் இதுபோது அறுபதாவது ஆண்டினை எய்திநின்றும், தமது நெடிய தமிழ்த்தொண்டால் உடல் பொருள்களின் தளர்ச்சியினை உற்றுநின்றும், தமது இனிய தாய் மொழித் தொண்டுகளைப் புரிவதில் சிறிதும் அயர்வின்றி, ஊக்கமும் உழைப்பும் கொண்டு முன்னிற்பது, பலரும் அறிந்த உண்மையாகும்.

6. நம் கவியரசு அவர்கள் தமது இனிய தாய்மொழித் தொண்டுகளைத் தம் காலமெல்லாம் முட்டின்றிப் புரிந்து மகிழ்ந்து வர விரும்பி, அவர்தம் அன்பர்கள் ஒரு நிதி சேர்த்து, நம் கவியரசர் அவர்கள் மணிவிழாவில், தமிழ்த்தாயின் வாழ்த்துக் கொடையாக அவர்களுக்கு அளிப்பதென முன் வந்துள்ளமை அறிந்து மகிழ்கின்றோம். அவர்தம் பேரன்பர்களாகிய திருவாளர்கள், மாணவர்கள், புலவர்கள் எல்லோரும் இம்முயற்சியில் மனமுவந்து கலந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

மகிழ்ச்சி

நம் சங்க உறுப்பினர் திருவாளர் மூகமது இபுராகிம் அவர்கள், B.A., B.L., தஞ்சை, சென்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பெற்றமை கருதிப் பெரிதும் மகிழ்கின்றோம். பொதுவாக நாட்டு நன்மைக்கும் சிறப்பாகத் தமிழ் வளர்ச்சிக்கும் ஆவனவற்றை யெண்ணிச் செய்வார்களெனக் கருதுகின்றோம்.

துயரம்

நம் சங்க அன்பர் திருவாளர் த. சு. நந்திகேசுவரம் பிள்ளை யவர்கள் 4—5—46 சனிக்கிழமை யிரவு காலஞ்சென்றமை குறித்து மிகவும் வருந்துகின்றோம். திரு. பிள்ளை அவர்கள், நம் திக்கற்ற மாணவர் இல்லத்திற்குப் பல ஆண்டுகள் நெல் உதவிபுரிந்து மாணவர் களைப் புரந்தவர்கள்.

மணி விழா

கரந்தைக் கவியரசு, திருவாளர், R. வேங்கடாசலம் பிள்ளை யவர்களைத் தமிழுலகம் நன்கறியும். அவர் இதுவரை தம் நுண் ணுணர்வாலும், உலையா முயற்சியாலும், ஆற்றி வந்த தமிழ்த் தொண்டைப் பாராட்டுதற்கும், அரிதின் ஆராய்ந்து கண்ட உண்மை களையும், தெளி பொருள்களையும், தமிழ்மக்களின் இன்றியமையாமை யின் பொருட்டு முட்டின்றி வெளியிடுதற்கு ஊக்க மூட்டுவதற்கும், அவர் அறுபதாம் ஆண்டு மணி விழாவில் ஒரு பொற்கிழியினை வாழ்த்தி யளிப்பதாக அவர் தம் பேரன்பர்களாகிய தமிழ்ப் பேரறிஞர் பலர் ஒரு வேண்டுகோளை வெளியிட்டுள்ளார்கள். இதனைக் கண்ணுறும் தமிழன்பர்கள் அனைவரும் மணிவிழா வாழ்த்திற் கலந் தருள முன்வருவார்களாக.

பொருளாளர்

வித்துவான் திரு. அரங்கசாமி. கரந்தை, தஞ்சை.

செயலாளர்கள்

அ. கணபதி

அ. பொன்னண்ணு

மதிப்புரை.

சீகாழித் திருப்பதிகங்கள் (தருமபுர ஆதீன வெளியீடு 99)

சீகாழித் தலத்திற்குரிய தேவாரத் திருப்பதிகங்கள் அடங்கியது. கைச்சுவடியாக என்றும் தாங்கியிருக்கக்கூடிய அழகிய நூல்.

சித்தாந்தத் திரயம் (தருமபுர ஆதீன வெளியீடு 106).

வினா வெண்பா, கொடிக்கவி, உண்மை நெறிவிளக்கம் என்ற மூன்று சித்தாந்த நூற்களைச் சிந்தாந்தத் திரயம் என்ற பெயரால், தெளிபொருள் விளக்கத்துடனும், ஆங்கில மொழிபெயர்ப்புடனும் அழகுபெற அச்சிட்டிருக்கின்றனர்.

மெய்கண்டார் சித்தாந்தக் கல்லூரித் தலைவர் திரு. வச்சிரவேல் முதலியார் அவர்களின் அணிந்துரையும், காலஞ்சென்ற திரு. நல்ல சாமி பிள்ளை அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும், திருவாவடு துறை, அருட்டிரு. நமசிவாயத் தம்பிரான் அவர்கள் முன்னிரு நூற் களுக்குஎழுதியஉரையும், திருநெல்வேலி திரு. ஈசுவரமூர்த்திப் பிள்ளை அவர்கள் மூன்ருவது நூலுக்கு எழுதியஉரையும், படிப்பவர் உள்ளத் தைக் கவரும் சிறப்பின.

தமிழ் கற்ரேரேயன்றி, ஆங்கிலம் பயின்ருேரும், இந்நூற்களி லுள்ள மாண்புகளை உணர்ந்து இன்புறலாம்.

திருக்குறள் அந்தாதி (திரு. R. K. அரங்கசாமி அவர்கள், சைன மித்திரன் பத்திராதிபர், இராசிபுரம், 0—10—0.)

மனப்பாடம் பண்ணத் தகுதியாக நூற்றைம்பத்தொரு குறள்கள் அந்தாதியாகத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. பொருள் வரிசை யாகவும், அகர வரிசையாகவும் பல குறள்கள் சேர்க்கப் பெற் றுள்ளன. இளைஞர்க்குப் பெரிதும் உதவும்.

கீழ்க்காணும் நூல்களும் வரப்பெற்ருேம்.

ஞானவுரை, ஞானசம்பந்தர் வழங்கிய (தருமபுர ஆதீன வெளியீடு 68) வித்துவான் திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் எழுதியது.

பஞ்சாவரண ஸ்தோத்ரங்கள், கணேச சிவ (தருமபுர ஆதீன வெளியீடு 72)

திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள் (தருமபுர ஆதீன வெளியீடு 104)

ஸ்ரீகண்டன் (தருமபுர ஆதீனவெளியீடு 107) ஒரு சிறு நாடகம்.

திருக்குறளின் குழந்தை உள்ளம் (திரு. R. K. அரங்கசாமி அவர்கள், 0—2—0)

நன்றிபாராட்டி, இந்நூற்களை சங்க நூல் நிலையத்தில் சேர்த்துக் கொண்டோம்.

ஐந்திணையும் ஐங்கணையும்

வித்துவான், செ. வேங்கடராமச்செட்டியார்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழி வழங்கும் தமிழ் நாட்டின் பண்டைய இலக்கண இலக்கியங்களில் ஐந்திணையியல்புகளைப் பரக்கக் காணலாம். அவை : முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனப் பெயர் பெறும். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றையும் திணை யென்று வழங்குவர். நிலம், காலம் என்ற இரண்டும் முதற்பொருள் என்று பெயர் பெறும். அந்நிலப் பிரிவுகளிலும் காலப்பிரிவுகளிலும் தோன்றுகின்ற தெய்வம், மக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர்நிலை, பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் ஆகிய இவை கருப்பொருள் எனப் பெயர் பெறும். மக்கள் வாழ்க்கையில் தோன்றுகின்ற புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன உரிப்பொருள் எனப்படும். ஒவ்வொரு திணையினும் முதல் கருஉரி யென்ற மூன்றும் உண்டு. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்று பெயர் பெறும். பாலைத்திணை யொன்றற்கு மாத்திரம் நிலம் கூறப் படவில்லை. கால முதற்பொருள் ஒன்றேயுண்டு. மேற்கூறிய நான்கு நிலமும் வேனில் வெப்பத்தால் திரிந்துழிப் பாலை யெனப்படும். 'நானிலம் வாய்க் கொண்டு நன்னீரற மென்று கோது கொண்டு, வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை' (திருவிருத்தம்) என நம்மாழ்வார் கூறுவது காண்க. கார் முதலிய பெரும் பொழுதும் மாலை முதலிய சிறு பொழுதும் கால முதற்பொருள் எனப்படும். இவை யாவும் தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களில் தோன்ற விளங்கும். இவ்வைந்திணை வருணனைகள் தமிழ்க் காவியங்களினும் புராணங்களினும் புலவர் பெருமக்களால் பலபடப் புகழ்ந்து கூறப் பட்டுள்ளன. ஐங்கணை யெனப்படுவன : தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் ஆகிய மலர்கள். இவை மன்மதன் கணைகள். மேற்கூறிய ஐந்திணைக்கும் ஐங்கணைக்கும் தொடர்புண்டா ? என்பதை யாய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் கூறிய இலக்கண வரையறைகளை முறை பிறழாது இலக்கியத்தி லமைத்துக் காட்டவல்ல புலவர் பெருமான் கச்சியப்ப முனிவரே யாவர். இவர், தொல்காப்பியம், சங்க நூல்கள், மெய்கண்ட நூல்கள் முதலிய நூற் கடலாகிய பாற்கடலைத் தம்மறி வெனும் மத்துக்கொண்டு கடைந் தளித்த இன்னமிழ்த மாக விளங்குவது தணிகைப்புராணமாகும். இது புலமை சான்ற பெருமக்கட்கு நல் விருந்தாக அமைந்து நயம் பல நவில்தோறும் நல்கு மியல்பினது; புராணங்கள் பலவற்றினும்

தலைமை சான்றதாய் அரிய பெரிய கருத்துக்கள் செறிந்ததாய் மதிவல்லோர்க்கே விளங்கு மியல்பினதாய்த் திகழ்வது.

இத்தணிகைப் புராணத்து நாட்டுப் படலத்து ஐந்திணைக்கும் ஐங்கணைக்கும் தொடர்புண்டு என்பதை விளக்கியுள்ளார் கச்சியப்ப முனிவர்; காண்பாம். தமிழ்க் காப்பியங்களினும் புராணங்களினும் நாட்டுப் படலம் இன்றியமையா உறுப்பாக முதற்கண் அமைந்திருக்கக் காணலாம், அதன்கண், குறிஞ்சி முதலிய ஐவகைத்திணைகளையும் அத்திணைகள் மயங்கிய இடங்களையும் புலமை தோன்ற புனைந்துரைத்தல் புலவர் மரபு. நாட்டு வருணனைகளின் வனப்பிற்காகவே புராணங்கள் நின்று நிலவ வேண்டுமென்பது தமிழ்ச் சான்றோர்களின் உயர்ந்த கருத்து. மெச்சும் புலமைக் கச்சியப்ப முனிவர் தணிகைப் புராண நாட்டுப்படலத்து ஐந்திணை வருணனைகளைத் தொல்காப்பியர் கருத்துணர்ந்து கூறிச்செல்லுமாண்பு அறிஞர்க்குஆராவின்பந் தருவதாகும்.

“ முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே (தொல். அ. 3)

என்ற சூத்திரத்து முதற்பொருளில் கருப்பொருளும் கருப்பொருளில் உரிப்பொருளும் சிறந்தன என்பதும் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருட்டுச் சிறப்புத் தரும்பொருட்டே நூல்களில் கூறப்படும் என்பதும் பெறப்படும். இக் கருத்தையொட்டி யொவ்வொரு திணையினும் முதற்பொருளை முதற் செய்யுளினும், கருப்பொருள் பலவாதலின் அவற்றைப் பல செய்யுட்களால் அதற்குப் பின்னரும், உரிப்பொருளை யதற்குப் பின்னரும் கூறி, இறுதிக்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருட்குத் துணையாய் நின்று சிறப்புத் தரும் இயல்பைத் தொடுத்து ஒரு செய்யுளினும் கூறிச் செல்கின்றார் கவியரசாம் கச்சியப்ப முனிவர். “மாயோன்மேய காடுறையுலகமும்” என்புழிக் கருப்பொருளாகிய தெய்வத்தை முதற்பொருளொடு கூட்டிக்கூறித் தெய்வவழிபாட்டு மரபைத் தொல்காப்பியர் விளக்கியதையும் கொண்டு முதற்பொருள் கூறும் வழி,

‘வெற்பர் வேலிறைக்குப், பொருந்து பூசனை விழாத்தினமெடுப்பது பொருப்பு” (தணி-நா-32)

“குமரிக்கு விழா வெடுத்தனர், துகைத்திறுப்பது தொகுமுரப்புச் சூழலே” (50)

“கண்ணற்கன்பு, பூக்குஞ்செயலாற் பொலிவுள்ளது பூத்தகானம்”(59

“இந்திர தெய்வம்போற்ற, அலகில்சீர் வளத்திறேங்கு மலர்தலைப் பழனச்சூழல்’’ (73)

“புனலும்பற் போற்றித்தம் கருத்து வாய்ப்பது கருங்கடற்புரம்”(136

எனத் தெய்வ வழிபாட்டை ஐவகை நிலமுதற் பொருள்கட்கும் அடையாகக் கூறியுள்ளார்.

கருப்பொருள்களுள் முதன்மைவாய்ந்த தெய்வத்தைக் கூறும்வழி ஒவ்வொரு நிலத்தும் அவ்வந்நிலத்தெய்வங்கள் தங்குதற்குத் தற்குறிப் பேற்றமாகக் காரணம் கற்பித்துக் கூறுமுறை பாராட்டற்குரியது. முருகன் தன்னை வணங்கும் அன்பர்களின் அரிய உயிராகிய குகை தொறும் வசிக்கும் தன்மையால் குகன் எனப் பெயர் பெற்றவன். குகையிலிருப்பவன் குகன் என்பது காரணப்பெயர். இப்பெயர்க் காரணத்தைப் புறத்தினும் வைத்துக் காட்டத் தன் பெயர்க்கியையு மாறு குகைகள் நிறைந்த மலைக்குரிய கடவுளாய் விளங்கினான் போலும் என்கின்றார். கொற்றவை, தன் மகனாகிய முருகனைப்பிரிதல் ஆற்றாமையால் அவனது குறிஞ்சியைச் சூழ்ந்துள்ள மலையுங்காடுந் திரிந்த பாலைக்குத் தெய்வமாயினாள் எனவும், மாயோன், தன் தங்கை யாகிய கொற்றவையைப் பிரிதலாற்றாமையால் பாலைசூழ்ந்த முல்லை நிலத்திற்குத் தெய்வமாயினான் எனவும், இந்திரன், தன் தம்பியாகிய (உபேந்திரனாகிய) மாயனைப் பிரிய இல்லாது அம்மாயனது முல்லை சூழ்ந்த மருத நிலத்திற்குத் தெய்வமாயினான் எனவும், மேற்றிசைக் கடவுளாகிய வருணன், கிழக்கு, மேற்கு என்று உலகர் சேர்த்துக் கூறும் இயைபுபற்றிக் கீழ்த்திசைக் கடவுளாகிய இந்திரனது மருத நிலத்தைச் சூழ்ந்த நெய்தல் நிலத்திற்குக் கடவுளாயினான் எனவும் இயைபு படக் கூறியிருத்தல் காண்க.

இனி, மக்கள் முதலிய கருப்பொருள்களை யொவ்வொரு திணை யினும் விரிவாகக்கூறி முதலினும் கருவினுஞ் சிறந்த உரிப்பொருளை யுரைக்கின்றார். "முன்பு மாதவப் பயத்தினா லவண் முயக்கமர்வார்" (த. நா-48) எனக் குறிஞ்சிக்குரிய புணர்தல் நிமித்தமும் புணர்தலு மாகிய உரிப்பொருள் கூறினார். 'மாதவப் பயத்தினால்' என்பது புணர்தல் நிமித்தமாதல் காண்க.

"உடங்கு செல்பவர்க் கிடையூறொன் றின்றியே
அடங்கரும் பெருமகிழ் வாக்கி மாதரை
இடங்களி லிரீஇயவர் செலவ மூங்குமா
தொடங்கலி னுதவியிற் சுரமொப் பில்லையே" (த-நா. 57)எனப்

பாலைத் திணையின் உரிப் பொருளாகிய உடன் போதலும் பிரிதல் நிமித்தமாய செலவழுங்கலும் கூறியுள்ளார். 'கொண்டுதலைக் கழி தலும் பிரிந்தவ ணிரங்கலும் உண்டென, மொழிப ஓரிடத் தான' (தொல்-பொ-17) என்றமையால் உடன் போதலும் பிரிவாதல் காண்க.

'மங்கை நல்லார், கார்கண்டு கவிழ்த்த விழிப்புனல் கால் செய்தன்பர்
தேர்கண்டு மிழோகை விழிப்புனல் சேர வாரும்
ஊர்கண்ட நெடும்பணை சென்றினி தோம்பு மன்றே'
(த-நா-71)

எனத் தலைவி யில்லிருத்தலும் தலைவன் மீண்டு வருதலாகிய இல்லிருத் தலினிமித்தமும் கூறியுள்ளார்.

'பரத்தைமையாற் கணவருடன் பாவையர்கள் புலந்தொழிக்கும்
வரத்த கலா மலதேனைக் கலாம்வருவ தறியாது' (த-நா-134)

தன மருதத்திணையின் உரிப்பொருளாகிய ஊடல் நிமித்தமும் ஊடலுங் கூறினர்.

'துணைவனீங் கினர் தொழுதிப் புள்ளொடும்
அணையும் வண்டொடும் அலையு மீனோடும்
புணரு மின்னவிற் புலம்பன் மேயினர்.' (த-நா-151)

என நெய்தற்றிணையின் உரிப்பொருளாகிய இரங்கல் நிமித்தமும் இரங்கலும் கூறியுள்ளார். 'துணைவனீங்கினர்' என்றது இரங்கல் நிமித்தமாகும். இங்ஙனம் ஐந்திணை யுரிப்பொருள்களையும் முறை வழாது திணை தொறுங் கூறியவர், ஒவ்வொரு திணையினிறுதியினும் முதற் பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளைச் சிறப்பிக்கு முறையை விளக்குமிடத்தில் ஐந்திணையினும் ஐங்கணைகளை யமைத்துக் காட்டுகின்றார்.

'நினைக்கு மரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அனைத் துணவுநீக்கு மசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலம்
கொல்லுமத னம்பின் குணம்.'

என்ற பாடலை மனத்துட்கொண்டு குறிஞ்சி யசோக மரத்தையும், பாலை நிலம் மாமரத்தையும், முல்லை நிலம் முல்லைக்கொடியையும், மருத நிலம் தாமரையையும், நெய்தல் நிலம் நீலத்தையும் கொண்டிருத்தற்குக் காரணம் கற்பிக்கின்றார்.

'உயங்கு வாரல தின்புறுரென்பதுண் மையினுன்
முயங்கு வாரைமுன் றுயர்செய்தன் முறைதெரித் தாங்கு
வயங்குலாவிய மாரவேள் பகழியாய் மலர்ந்த
தயங்குதேமல ரசோகங்க டழீஇயது குறிஞ்சி.' (த-நா-50)

எனக் குறிஞ்சி நிலம் அசோகத்தைக் கொண்டுள்ளமைக்குக் காரணங் கூறுகின்றார். துன்புறுகின்றவரல்லது இன்பமுற மாட்டார் என்பது என்றும் உள்ள நியதியாகலின், பின் புணர்ந்து இன்புறற்குரிய காதலரை முன்னர்த் துன்புறுத்தலாகிய முறையைத் தெரிவித்தாற் போல, வெற்றி பொருந்திய மன்மதன் கணையாக மலர்ந்து விளங்குகின்ற தேனையுடை மலர்நிறைந்த அசோகமரத்தைத் தன்பாற் கொண்டுளது குறிஞ்சி நிலம் என்பது பொருள். "துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது" என்னு முதுமொழிக் காஞ்சியும் காண்க. புணர்ந்தின்புறத்தக்க காதலர்க்குக் குறிஞ்சி நிலம், அனைத்துணவும் நீக்குமசோக மலராகிய மதன் கணையைக்கொண்டு துன்பஞ்செய்து தன் உரிப்பொருளாகிய புணர்தலின்பத்தை மிகுவிக்கும் பொருட்டு அசோகமரங்களைத் தாங்கியுள்ளது என்றமையால் குறிஞ்சி நிலமாகிய

([illegible]-ம் பக்கம் பார்க்க)

சிலப்பதிகாரம்

வித்துவான். ப. பழனி முதலியார் அவர்கள், கரந்தை.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் க, பக்கம் 16)

“மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகத் தாங்கு” என்பதனுலும்.
“தன் துயர் காணுத் தகைசால் பூங்கொடி
கற்புக் கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டில மால்”

என்பதனுலும் உணரலாம்.

மதுரை மூதூரைச் சுற்றியுள்ள மதிலில் பல்வகைப் பொறிகளும் அமைந்திருந்தன என்பது “கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்... ...ஞாயிலும் சிறந்து நாட் கொடிநுடங்கும்” மதில் என்பதனுல் உணரலாம்.

கொலைக் களக் காதை :- இது கோவலன் கொலையுண்டதைக் கூறுவது. மாதரியின் இல்லத்தில் கண்ணகி உணவு சமைத்தாள், சமைத்தபின்னர் ஓலைத் தவிசிடக் கோவலன் இருந்த பின்னர் பூமியில் நீர்தெளித்து இலைபோடுகின்ருள், பூமிதேவியானவள் கண்ணகிக்கு வரப்போகுந் துன்பத்தை நினைத்து மயக்க முற்றனளாயிருப்ப அம்மயக்கத்தைப் போக்குபவள் போலத் தண்ணீர் தெளித்தாள், என்கின்ருர் அடிகள். கோவலன் (தன் பிழையை நினைத்து வருந்துகின்ருன்.) பரத்தையோடு திரிந்தும், இருமுது குரவர் ஏவல் பிழைத்தும், உனக்குச் சிறுமை செய்தும் நன்னெறி பிறழ்ந்தேன்! அத்தகைய எனக்கு நன்மையும் உண்டாகுமோ என வருந்தினுன். அப்போது கண்ணகியானவள் தான் கணவனேடு நுகரும் இன்பத்தை இழந்ததைக் குறிப்பிடாது, “அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலும்இழந்த என்னை” என்கின்ருள். இதனைக்காட்டிலும் நாகரிகமான முறையில் எவ்வாறுணர்த்துவது? இவ்வாறு கூறிய கண்ணகியைப் “பொன்னே கொடியே புனைபூங் கோதாய், நாணின் பாவாய் நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி”......எனப் பாராட்டுகின்ருன். அரசன் தீவினை விளையுங் காலமாதலின் கொல்லக் கொணர்க என்று சொல்ல வேண்டியவன் கொன்று கொணர்க என்று சொன்னுன் என்றிரங்கிக் கூறுகின்ருர் அடிகள். “வினை

வினை காலமாதலின் யாவதும், சினையலர் வேம்பன் தேரானாகி—— கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கென" எனவரும் அடிகளை நோக்குக.

ஆய்ச்சியர் குரவையில் இடைச்சியர்கள் குரவைக் கூத்தாடுதல் கூறப்படுகின்றது. இதில் வரும் "கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்" எனத் தொடங்கும் பாக்களும், "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி" என வரூஉம்பகுதிகளும்,"மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை முடிய"......என வரூஉம் பகுதிகளும் பத்திச் சுவையை உண்டு பண்ணுவன.

துன்பமாலை:- இது கண்ணகியுற்ற துன்பத்தைக் கூறுவது. தீய சொற்களைச் சொல்லுவதற்கு அடிகள் மனங் கூசினாரென்பது "கொலை குறித்தனரே" என்னும் சொற்றொடரால் அறியலாம். கொலையுண்டான் என்பதைக் கேட்ட கண்ணகி பெருந்துன்புற்றாள். கோபம் பொங்கி எழுந்தாள், ஞாயிறே! நீ செல்லாத இடம் இல்லையே, யாவும் நீ வானத்திலிருந்து அறிதியன்றே! என் கணவன் கள்வனோ எனக் கேட்டாள், கள்வனல்லன். இவ்வூரை எரியுண்ணும் என ஆகாயத்தினின்றும் ஓரொலி எழுந்தது.

ஊர் சூழ்வரி :- மதுரை மூதூரிலே கண்ணகி யானவள் சிலம்பை ஏந்திக் கொண்டு துன்புற்றுக் கூறியதைக் கூறுவது. "கள்வனோ அல்லன் கணவன் என் காற் சிலம்பு, கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே" என அவள் வருந்திக் கூறுவதும், என் "காதற் கணவனைக் காண்பனே" 'கண்டால் அவன் வாயில் தீதறு நல்லுரை கேட்பனே'. கேளேனாயின் என்னை எல்லோரும் இகழுங்கள் என்று அவள் கூறுவன, கற்போர் மனத்தை உருக்குவனவாகும். வெட்டுண்டு கிடக்கும் கணவனைக் காண்கின்றாள். துயரம் மிகுகின்றது. தான் அவனைக் காண, பின்னை அவன் கண்டு ஒரு வார்த்தை பேச வில்லையே என்று ஆறாத் துயரங் கொள்கின்றாள். "தார்மலி மணி மார்பம் தரை மூழ்கிக் கிடப்பதோ" எனவும், புண்போழி குருதியி ராய்ப் பொடியாடிக் கிடப்பதோ எனவும் புலம்புகின்றாள். இக் கொடிய ஊரில் கொழுநன் குறையைப் பொறுக்கும் பெண்டிரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல் என வினவுகின்றாள்.

வழக்குரை காதை:- கண்ணகி (தான்) வழக்குரைத்ததைக் கூறுவது. இதில் கண்ணகியின் வீரத்தன்மை புலனாகின்றது. வாயிலோனை விளிக்கும்போது "அறிவறைபோகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன்வாயிலோயே! எனஆண்மையோடுஅஞ்சாமல் விளிக்கின்றாள். பின்னரும் "தேரா மன்னா செப்புவதுடையேன்" என அவன் குற்றத்தைச் சுட்டிக் காட்டுகின்றாள். நற்றிறம் படராக் கொற்கை வேந்தே"எனவருவதும் அத்தகையதே. அரசன் பிழையுணர்ந்து, 'யானோ அரசன் யானே கள்வன்' எனக் கீழே விழுந்து உயிர் துறக்கின்றான்.

வஞ்சின மாலை :- கண்ணகி வஞ்சினம் கூறியதைக் கூறுவது. "பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில், ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும் "என்னும் அடிகளால் விளங்கும். தீயூட்டு வேன் என வஞ்சினங் கூறியகாலத்தும், "பார்ப்போர் அறவோர் பசுப் பத்தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு, தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்பதனுல் மனக்கொதிப்பிலும் தீயன செய்ய நினையாமை விளங்குகின்றது.

கட்டுரை காதையிலே மதுராபதித் தெய்வம் தோன்றி, இவ்வாறு கோவலன் ஒருவனைக் கொல்வித்தானென்று கூறி, அவளுக்கு ஆறுத லுண்டாக்குகிறது. பின்னர், பதினைந்தாம் நாள் தெய்வவடிவில் காண்பாய் எனவுங்கூறிற்று. மதுரையைவிட்டுக் கண்ணகி பெயர்ந்து செல்லும் போது, கீழ்த்திசை வாயில் கணவனேடு புகுந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கின்றேன் என வருந்திக் கூறு வது கற்போர் மனத்தைக் கரைக்கின்றது.

மூன்ருவதாக உள்ள **வஞ்சிக் காண்டம்** முழுவதும் வீரச்சுவை நிரம்பியுள்ளது. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு நேர்ந்த விதியைக் கேட்டு, செங்குட்டுவன், மனம் வருந்தித் தவறிழைத்தனு யினும் பிழையுணர்ந்து உயிர் விட்டானுதலினுலே அவனுடைய உயி ரானது வளைத்த கோலை நிமிர்த்தியது என்று கூறி, அரச வாழ்க்கை யிலே உண்டாகும் இடர்ப்பாட்டைக் கூறுகின்ருன். செங்குட்டுவன் இமயமலைச் சென்று தமிழைப் பழித்த கனக விசயராகிய வட நாட் டரசர்களை வென்று அவர்கள் தலையிலே கல்லை ஏற்றிக் கொணர்ந்து பத்தினிக் கடவுளுக்குக் கல்நாட்டிக் கோட்டஞ் சமைப்பித்தான். வட நாட்டரசர்கள் தோற்ருேடி யிருக்கவும், அவர்கள் தலையிலே கல் லேற்றிக் கொணர்ந்தது, செங்குட்டுவனுடைய வீரத்திற்குப் பழுதா கும் எனச்சோழனும் பாண்டியனும்கூற, அதனைக் கேட்டு வெகுண் டனன் செங்குட்டுவன். மாடலன் அப்போது கூறும் நீதி மொழிகள் மனத்தகத்திருத்தற்பாலன. அவை,செங்கோல் வேந்தே! இளமை நில் லாதென்பதை நரைமூதிர் யாக்கையுற்று நீயுங்கண்டனை, ஆடுங்கூத்தர் போல ஆருயிர் ஒரு வழி நில்லாது, செய்வினை வழித்தாய் உயிர் செல்லும் என்பனவாம். சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கடவுளுக்கு, கல்நாட்டிக் கோட்டஞ் சமைப்பித்து வழிபட்டகாலை, கயவாகு என்ப வனும் வந்திருந்தான். ஆகையால் இந்நூல் 1800 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதென்று தெரிகின்றது. "தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்" எனத் தொடங்கிவரும் அறவுரைகள் மக்கள் மனத்திருத்தற்பாலன. இத்தகைய அரிய நூலை தமிழ் மக்கள் ஊன்றிக் கற்றுப் பெரும் பயன் உறுவார்களாக.

பாரி மகளிர்.

திருவாட்டி. மே. மாசில்லாமணி அம்மையார் M.A., L.T., அவர்கள்
பெண்கள் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் க, பக்கம் 30)

Act II Sc. II

இடம் :— பாரியின் அரண்மனை.

பாத்திரங்கள் :— முருகன், வீரன், பாரி.

முருகன் :— வீரா கேளாய்! வேந்தர் மூவரும்
தீராப் பகையுடன் வேருய்க் கூடிப்
பறம்பு மலையின் திறம்தெரி யாது
வெற்றியே தமக்கென வேற்படை திரட்டி
முற்றுகை செய்தனர் மொய்ம்புடன் இன்று.

வீரன் :— அந்தோ கெட்டோம், இன்றே அழிவோம்,
எந்தையாம் வள்ளல் இழுக்கற் றிருந்தும்,
மூவர் கூடி முன்னணி வகுத்து
முற்றுகை யிட்டனர் முடிவு யாதோ ?

முருகன் :— வள்ளலாம் பாரியை எள்ளியே வந்தனர்,
கொல்லிய வரினும் வில்லியர் வீரரேம்
கொற்றவன் பக்கல் குழுமியே சென்று
வெற்றியே கொள்வோம், வென்றிடல் உறுதி.

வீரன் :— வெற்றியே நமக்கென விருப்புடன் சொன்னுல்,
முற்றுகை செய்த மூவர் திறத்தைச்
சற்றுமே அறியாய், சரிவரக் கேளாய்.
நம்மவர் தலைவன் நானிலந் தனிலே
செம்மையாய் நின்ற சிறுநிலத் தலைவன்.
சிற்றர சன்வலி மற்றவர் கண்முன்
வெற்றுரை யென்றே விளம்புவ ரன்றோ !

முருகன் :— என்னே வீர ! எதற்கும் ஐயமோ ?
கொன்னே கொண்டாய் கோழைநீ அச்சம்
விண்ணவர் நாடென விளங்கும் நாடாம்
மன்னன் பாரியின் மகிழ்வுறு நாடாம்
பறம்பு நாட்டின் பான்மையை அறியாய்.
தீங்கனி வருக்கமும், தீஞ்சுனைப் பெருக்கமும்
சிறியிலை நெல்லும் நறுமணத் தேனும்,
வளமுறு கிழங்கும் வாரிபோல் மலிந்து
அளவிலாக் காலமாய் அளிக்குமே உணவு.
நீரும் கனியும் நிரம்ப உண்டெனில்
வேறென் வேண்டும் விளம்புவாய் நீயே.

வீரன் :— பாரியின் பறம்பில் பல்வகை வளனுங்
கூறிய முறையில் குவிந்தே கிடப்பினும்
பாவலர் பகர்ந்த பண்ணிறை பாவிற்
காவலாய் அளிப்பன் அளக்கொணுச் செல்வம்.
விரைந்து வந்த விறலியர் தாமே
விரும்பிக் களிக்கும் விலைபெறு கலன்கள்
பொற்ரு மரையுடன் பொலன்மிகு ஆடையும்
கொறறவன் ஈகுவன் கொடைமடம் கொண்டே.
எல்லையில் வளனெலாம் இங்ஙனம் இறைப்பின்
தொல்லைச் செல்வமும் தொலையா வளனும்
வரவாக் குன்றி வருவாய் அழியும்.

முருகன் :— செல்வங் கெடினும் ஒல்குவ துண்டோ ?
இல்லை யெனினும் ஈந்தே தீருவன்.
பாவலர் துன்பம் பாராப் பாரிக்
கிவதின் சிறந்தது ஏதுள தியம்புவாய்.
கொடைநிறை வேந்தர் குவலயத் திடத்துக்
குன்ருப் புகழே கொள்ளுவர் என்றும்.
கொடைநிறை வேந்தர் குவலயம் நீப்பினும்
குன்ருப் புகழே நிறுவுவர் உலகில்.
ஒன்னலர் ஒழியா உறுதுயர் செய்யினும்
அன்னவர் தமக்கும் அருளொடு ஈயும்
அருங்குணப் பாரியை அறமே காக்கும்.

வீரன் :— பல்சொல் பிதற்றிப் பயனென் ? செல்வோம்
வார்த்தை பெருகின் கீர்த்தி அழியும்.
எழுவாய் செல்வோம். இவ்விட மிருந்து
தொழுவோம் முருகனைத் தொலைப்போம் துயரே.

Act II Sc. III

இடம் :— அரண்மனை.

பாத்திரங்கள் :— அங்கவை, சங்கவை, கபிலர், ஏவலாள்.

சங்கவை :- கலக்கமுற் றனையோ ? கலங்கினேன் நானே
விலக்கரும் முற்றுகை வெம்மையை நினைந்து.

அங்கவை :- புலனமுக் கற்ற அந்த ணாளர்நம்
புண்ணியப் பயனாய் மண்ணிடம் வந்தார்
ஆன்றவிந் தடங்கிய சான்ருேர் நட்பு
அல்லும் பகலும் நல்லுணர் வளிக்கத்
தோன்றுமோ துயரம் ? தொடருமோ தோல்வி ?
நாற்படை மிகுத்து நன்னிதி பெருக்கிக்
கோற்செயும் இறைக்குக் கொற்றம் தருபவன்
சிந்தையில் நல்லறம் சிறப்புறப் புனைந்து
சீர்புகழ் பனுவல்செய் பார்புகழ் கவியே.

சங்கவை :- ஏனோ, எனக்கிக் கலக்கம் ஏனோ;
மேனாட் கண்ட வானெடுங் கனவு
நலிவுறச் செய்து மெலிவுற வைத்தது.
என்மனம் இன்று ஏனோ சுழல்வது ?
துன்றுமோ துயரம், தோன்றுமோ சூழ்வினை?

அங்கவை :- தந்தையின் கொடைமடம் தாங்கா தெழுந்து
நிந்தையே படர நெடுந்தேர்ப் படையுடன்
வந்திடும் வேந்தரும் வாழ்வடை வார்கொல் ?
அந்தோ அழிவர் ஆவரோ உலகில் ?
நல்லறம் ஒன்றே நலம்பெறத் தழைக்கும்
அல்அறம் அழியும் என்றனர் சான்றோர்.

சங்கவை :- சான்றோர் கூறிய சால்புறு கூற்றை
ஊன்றிப் பார்த்தும் உண்மை காண்கிலென்,
நல்லறம் இயற்றிய நல்லோர் யாவரும்
நற்கதி யடைதலை நானறி கிலனே;
தொல்லை மிகுமிச் சள்ளை உலகில்
பொல்லா தவரே பொன்று தவர்காண்
ஓரறி வுயிர்க்கும் பேரறி வுடனே
தண்ணளி பரப்பிய தாதையை யிகழ்ந்து,
இன்னணம் மூவர் எழும்புதல் அறமோ ?
இன்னும் யானுனக் கியம்புவன் கேளாய்,
நன்மை தழைப்பதும் தீமை தீய்வதும்
இவ்வுல கெங்கணும் இல்லை இல்லை.

(கபிலர் வருகிறார்)

அங்கவை :- நங்காய் ! பாராய் ! நாவலர் வந்தார்.
தங்கிய உன்கவை தகர்த்தெறிந் திடவே
பேகனும் வள்ளல் பெருந்துணை யாட்டியின்
வேகமாம் துயரைப் பாகமாய்க் கொண்டு
மங்கையின் கண்ணீர் மாற்றிய கோவே !
இன்றே கொண்டோம் எல்லையில் உவகை
கொன்றோம் கவலை உன்றன் வரவால்.

கபிலர் :- கவலைக் குறியினைக் கண்டேன் மக்காள்,
அவலம் கொண்டீர் அறைவீர் குறையை.

சங்கவை :- தார்புனை மூவர் போர்செய்து நின்றனர்;
முடியுடை வேந்தர் முற்றுகை யிட்டனர்;
படியிடை நாமும் கெடுவோம் விரைவில்.
நால்வகைப் பயனும் நலம்பெறு வளனும்
கோல்தருந் திறனும் குன்றிடு மன்றோ ?

கபிலர் :- அலமரல் மக்காள் ! அறிந்தேன் சூழ்ச்சி,
கலங்கலீர் உமது கவையெலாம் அழிப்பீர்
பைங்கிளி பலவும் பறந்துடன் சென்று,

பசுங்கதிர் கொணரவும் பழக்கி யுள்ளேன்
முற்றுகை நீட்டி முதிர்ந்திடு மாயினும்,
சற்றுமே பஞ்சம் தரிப்பதற் கில்லை.

சங்கவை :- மந்தப் புத்தியும் மடமைக் குணமும்
சந்ததம் ஐயம் தந்தெனைக் கலக்குமே.

அங்கவை :- இன்னலைப் பெருக்கும் இம்மனம் உனக்கும்
என்னோ வாய்த்தது என்சிறு தங்காய்!

கபிலர் :- மண்ணுல கதனை விண்ணுல காக்கலும்
விண்ணுல கதனை மண்ணுல காக்கலும்
எல்லாம் மானிடர் எண்ணும் விதமே;
எல்லாம் மனமே எல்லாம் நினைவே.
மனத்தின் மாய்கையை மங்கைமீர் கேளீர்;
மாசறு எண்ணமும், மாசுகொள் சூழ்ச்சியும்
காசறு உவகையும், கணக்கறு வஞ்சமும்
முரண்பட வெழுந்து உரம்படத் தோன்றும்.
மறங்கொள் சிந்தையை மாற்றியும் அழித்தும்
அறங்கொள் சிந்தையைத் திறம்பட வளர்த்தும்,
பரம்பொருள் போற்றிப் பார்வதி வோமே,

Act III Sc. I

இடம் :— கோட்டையின் வெளிப்புறம்.

பாத்திரங்கள் :— மூவேந்தர், கபிலர்.

பாண்டியன் :- கண்டேன் ஒருவனை; கண்டீர் நீவிர்?

சேரன் :- கண்டேன் நானும், காவல னல்லன்.

சோழன் :- காவல னலனவன் காண்பீர் அங்கே;

பாண்டியன் :- வாள்கைக் கொண்டிலன் வில்லும் பிடித்திலன்
தாள்கழல் அணிந்திலன் தாரும் புனைந்திலன்!

சோழன் :- முப்புரி நூலணி திப்பிய மார்பன்
மெல்லியல் உடலான் மெல்லியல் உறுப்பான்
அகன்றெழும் நுதலான்; அருள்நிறை கண்ணன்
நின்றவன் யாவன்?

சேரன் :- நின்றவன் கபிலன்!

பாண்டியன் :- கபிலன்! ஆம், ஆம்!

சோழன் :- கபிலன் என்றாய்?

பாண்டியன் :- எதற்கிவண் வந்தான்?

சேரன் :- எங்ஙனம் அறிவோம்?

சோழன் :- யாதோ கூறினன். எழும் எழும் கேட்போம்.

(கபிலர் கோட்டை மீதிருந்து.)

கபிலர் :- அளிதோ தானே பாரியது பரம்பே
நளிகொண் முரசின் மூவரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே!

பாண்டியன் :- பறம்பு மலையின் திறம்பல கூறினன்
பொதிய மலையின் பொலிவுறு திறனும்,
கொல்லி மலையின் நல்லியல் வளனும்,
நேரியங் கிரியின் நிறைந்த ஆக்கமும்
ஏதிவன் அறிந்திலன்! எத்தனை செருக்கு?

சோழன் :- புலமிக் கவரும் புலனை இழப்பர்.

சேரன் :- யாதோ அறைகுவன், யாதென அறிவோம்

கபிலர் :- மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீரியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியும் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

கபிலர் செல்லுகிறார்

சோழன் :- பல்புகழ்ச் சோழ ! வஞ்சிச் சேர !
வெல்லுதல் அரிதென விளம்பினன் புலவன்.

சேரன் :- பொய்யாப் புலவன் மெய்யே கூறினன்
பாரி பறம்பு பகைவர்க் கரிதே.

சோழன் :- எத்தனை ஆண்டு முற்றுகை யிட்டோம் !

சேரன் :- எத்தனை ஆண்டு முற்றுகை செய்தென் !
அத்தனை ஆண்டும் அடைவது தோல்வியே.

பாண்டியன் :- என்னே இச்சொல் இயம்பினை சேர !
எடுத்த கருமம் தொடுத்து முடிக்கும்
இசைச்சொல் வீரர் எனும்பெயர் நீத்து
வசைச்சொல் தேடி வாய்ச்சொல் சொன்னுய்.
தோல்வி யெனும்வசை தொலையா வசைகாண்.
நமது வாழ்வின் நலம்பெறு நிகழ்ச்சியில்
உளது தோல்விக் கோரிடம் ? விடுவிடு
மீளவும் சென்று கோளினைச் சூழ்ந்து
பார்மிசை வதிவோம் பாரியை வென்றே.

Act. III. Se II.

வீரன் :- முடியுடை வேந்தர் மூவரும் ஓடினர்

முருகன் :- நடுநிலை தவறின் கெடுவரே எவரும்

வீரன் :- விடுவிடு தத்துவம் விளம்பேல் ஞானம்
நடுநிலை தவரு நல்லோர் தினம்தினம்
படுந்துயர் அறிவாய் ?

முருகன் :- பாதகர் படுந்துயர் ?

வீரன் :- அல்லலும் உவகையும் எல்லார்க்கும் உரித்தே
நல்லவர் அல்லவர் யாவர்க்கும் உரித்தே
நடுநிலை தவரு நல்லோர்க் கெனவோர்
முத்தியாம் உலகம் உண்டென அறைவோர்
பத்தியை நம்பேன்.

முருகன் :- பாரினி லெதைத்தான்
நம்புவாய் ? விடுவிடு நலனிலாத் தத்துவம்.

(கபிலரும், அங்கவை சங்கவையும் வர)

வீரன் :- நம்பெரும் புலவர் நாவலர் வந்தார் !
நம்பெருந் தலைவன் நங்கையர் வந்தார் !

முருகன்:- நாவல வாழி ! நங்கைமீர் வாழி !
நலமிகுந் தலைவன் நற்றிறம் பழித்து
முற்றுகை யிட்ட மூவர் தாமும்
தெற்றெனத் தோல்வியைத் தெளிந்தனர் போலும்!
தம்முயிர் மாய்க்கத் தயங்கினர் போலும்!
சென்றே மறைந்தனர் எங்கோ போயினர்!
இன்றே தோற்றனர் இனியென் செய்குவர் ?

அங்கவை :- கொள்வோம் உவகை கொண்டோம் வெற்றி!
எள்ளள வச்சமும் இனிமே லுண்டோ ?
சங்கவை கேளாய்! சஞ்சலம் தீராய்!
தங்கையே உனக்கும் தவிப்பினித் தகுமோ ?

சங்கவை :- இன்று மறைந்தவர் என்றும் மறைவரோ?
அன்பைப் போன்றே அழுக்கா றதற்கும்
அழிவு முண்டோ அவனி தனிலே.

Act III. Se. III.

இடம் :—பறம்பை அடுத்ததோர் ஊர்
பாத்திரங்கள் :—மூவேந்தர்

சோழன் :- முற்றுகை யிட்டோம் முழுவதும் தோற்றோம்
வெற்றுரை போன்று விளைந்தது நம்வினை
பாரியை எதிர்த்துப் போர்புரி செயலை
தீரவே ஒழித்து வேறொரு சூழ்ச்சி
விரைவினிற் செய்து முறையினில் வெல்வோம்

சேரன் :- வேறொரு சூழ்ச்சியால் வெல்வதே துணிபு
பாவலர் மொழியைப் பாண்டிய மறந்தாய்?

பாண்டியன் :- 'தாளிற் கொள்ளலிர், வாளிற் றூரலன்'
என்றிவ் வுரைகள், இயம்பிப் பின்னும்
'பல்வளம் பல்கிய பாரிதன் னாட்டை
வெல்வதாம் வழியை விரும்புவீ ராயின்
கொடைப்பெருங் குன்றைப் பாடினீர் ஆடினீர்
நடைபயில் கூத்தர், பாணர் படையொடும்
சென்றிடின் அளிப்பன் குன்றும் நாடும்'
என்றே புகன்றனன் துன்றுமப் பாவலன்.

சோழன் :- பாடியும் ஆடியும் பரிசிலர் போலத்
தேடியே வம்மின், திரள்பொருள் பெறுமின்
என்றிவண் பகர்ந்தது எத்தனை பெருமிதம்!
ஒன்றிய வேந்தர்க் கொழிவிலா வசைச்சொல்,
முடியுடை வேந்தரைத் துடியுடைப் பாணராய்
பரிசில் வேண்டிப் பாரியை யணுகத்
துரிசிலாப் பாவலன் துடுக்கென மொழிந்தான்!

சேரன் :- எள்ளிக் கூறிய இழுக்குறு மொழியே;
எனினும் ஒருசொல் யானறை குவனே.
விறலியர் பாணர் திறம்நிறை கூத்தர்
பரிசிலர் பாணினி பாவல ருடனே
மற்றொரு வேடம் வகையுறப் புனைந்து
தக்கதாம் முறையில் தளர்வுடன் செல்வோம்.
அல்லும் பகலும் அலைந்தவர் போலச்
சொல்லிலும் நடையிலும் மெல்லெனப் பணிந்து
பற்றினோம் உன்னைப் பரிசிலர் நாங்கள்
வெற்றிக் காவல! விரும்பினோம் உனையே
எமக்கருள் புரிவாய் எம்குறை தீர்ப்பாய்
என்றே கூறின், நன்றென உவந்து
தனைநமக் கீவான், தன்னலம் பாரான்.

பாண்டியன் :- வஞ்சனை புரிந்து வள்ளலைக் கொல்லல்
அஞ்சுதல் இல்லா அரசர்க் குறுமோ?
நெஞ்சி லுரத்துடன் நேர்முகம் நின்று
அஞ்சாப் போர்தனில் அடக்குதல் முறையே.

சோழன் :- அஞ்சாத் திறம்கொள் விஞ்சாப் பாண்டிய !
வீரத் தன்மையின் சீர்குணம் யாது?
வீரியம் பேசிக் காரியம் அழிப்பதோ?
காரியம் முடிக்க வீரியம் குறைப்பதோ?
உத்தியாம் நல்ல புத்தியைக் கொண்டு
வெற்றியாம் விளைவைப் பெறுவதே வீரம்.

பாண்டியன் :- ஆம் ஆம், சேர, அறிந்தேன், அறிந்தேன்
கூறிய சூழ்ச்சியே, குறிப்பாய்க் கொண்டு
காரியம் முடித்துக் களிப்போம் நாமே.

Act. IV. Sc. I.

இடம் :— அரசவை

பாத்திரங்கள் :— பாரி, கபிலர், அவை உறுப்பினர், ஏவலாளர், பரிசிலர்.

கபிலர் :- செய்ந்நன்றி யறியும் செல்வா வாழி!
சிற்றின மறியாக் கொற்றவ வாழி!
இன்முக முடையாய் இனியாய் வாழி!

படைத்தலைவன் :- அஞ்சினர்க் களிசெய் அரசே வாழி!
வெஞ்சின மில்லா வேந்தே வாழி!
அணிபடை கொண்டு அழித்தாய் வாழி!
அழிபடை தாங்கி ஆண்டாய் வாழி!

முருகன் :- பரிசிலர்க் கிறைவ! பார்புகழ் மன்ன!
குரிசிலே! வந்தனர், இரவலர் பல்லோர்
சேணுறு தம்மிடம் தீதற நீங்கிக்
கானுறு கடுவழி கடிதில் நடந்து
வறுமைப் பிணியால் வாட்டமுற் றழுங்கிச்
சிறுமை எய்தினர் சீரும் குன்றினர்.

பாரி :- வம்மின் பரிசிலர்! வம்மின் எம்அவை

பாண்டியன் :- அறிவுமடம் படுத்தல் அறிந்தாய் வாழி!

சோழன் :- அறிவுநன் குடையாய் அறிவாம் வாழி!

சேரன்:- வரிசையறிந் தளிக்கும் வல்லாள்! வாழி!

பாரி :- பரிசிலர் நீவிர் பரிவுடன் வந்தீர்
பாக்கியம் பெற்றேன் பல்முறை களித்தேன்

முதற்பாணன்:-மாரிபோல் நன்கொடை மக்கட் களிப்பாய்!
சீரிய நின்கொடை கூறவே கேட்டு
நாடியே வந்தனம்; நன்முகம் கண்டனம்

இரண்டாம்பாணன் :-மன்பதை காக்கும் மன்னு வாழி!
துன்பிகல் துடைக்கும் துணைவா வாழி!
அருளுடன் ஆட்சிசெய் அரசே வாழி!
பொருள்நித மளித்திடும் புண்ணியா வாழி!

மூன்றும்பாணன் :-காவல வாழி! நாவல வாழி!
நண்பனுய்க் கபிலனைக் கொண்டாய் வாழி
வள்ளலே வாழி! வரதனே வாழி!

விறலி :- பாரி பெயர்தனைப் புகழ்வர் பலபேர்
பாரியைக் கண்டு பாரினில் உவந்தோம்
பாரி யொருவனே பாரகம் புரப்பான்?
பாரி யொருவனே பாருளோர்க் களிப்பான்?
மாரியு முண்டு பார்தனைப் புரக்க.
மாரியை யேனே மக்கள் புகழார்?

பாரி :- இவண்நீர் வதிவீர் எழில்நிறை பெரியீர்
பரிசிலர் நீவிர் துரிசிலா மனத்தீர்
கருதிய பொருளை உறுதியாய் ஈவன்

(சேவகனை நோக்கி)

முருகாய் செவ்வாய், தருவாய் அணிபல
மறுவறு மணிபொன், மாசிலா ஆடை
அளிப்போம் இவர்க்கே, களித்தோம் இன்றே
அறுசுவை உண்டி அமர்ந்தினி தூட்டக்
கறியமு துடன்நற் கனிகளும் உண்பீர்

சோழன் :- முல்லைக் கொடியுறு தொல்லை தீர்த்தாய்!
வந்தோம் இங்குனை வந்தனை புரிந்தே,
ஒன்றே விரும்பினம், அன்றேல் வேண்டோம்,
ஈவை யெனிலதை ஏற்குவம் களிப்புடன்.

பாரி :- அளிப்பாய் ஒன்றென அருள்மொழி பகர்ந்தீர்
அளிப்பேன் உமக்கு, அறைவீர் விருப்பம்
தேர்தான் விரும்பினும் சீர்தான் விரும்பினும்
பறம்பு விரும்பினும், திறம்பட ஈவன்

பரிசிலர் :- தேரும் விரும்போம், பாரும் விரும்போம்
ஊரும் விரும்போம் உணவும் விரும்போம்
ஆடையும் விரும்போம் அணிகலன் விரும்போம்

பாரி :- அறைவீர் விருப்பம், அளிப்பேன் யானே

பரிசிலர் :- கொடைப்பெருங் குன்றூர் கோமகன் பாரியைக்
கொள்ளவே விரும்பினம் கொடுப்பா யக்கொடை!

பாரி :- என்னையே விழைந்தீர் எத்தனை யின்பம்!
என்னையே கொடையாய் ஈந்தேன் இன்றே!
இன்னே கொள்வீர் ஏற்பீர் கொடையே!

(தொடரும்.)

எழுத்தும் பேச்சும்

வித்துவான், பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் B. A., (Hons.,) B. O. L., விரிவுரையாளர், அரசினர் ஆங்கில ஆசிரியகலாசாலை, இலங்கை.

உலகில் வழங்கிவரும் எல்லா மொழிகளும் எழுத்து உருவத்திலும் பேச்சு உருவத்திலும் காணப்படுகின்றன. இந்த உருவங்களே ஒருவர் தமது கருத்தைப் பிறருக்கு வெளிபடுத்தவும் பிறருடைய கருத்தைத் தாம் அறியவும் உதவியாயிருப்பன. இத்துறையில் இவை ஒற்றுமை உடையனவாகக் காணப்பட்டாலும் மற்றைய துறைகளில் இவை வெவ் வேறளவினவான வேறுபாடு உடையனவாக அமைந்து விளங்கு கின்றன. எழுத்து, ஒரு மொழியின் ஒலிவடிவை வரிவடிவிற் காட்டு கிறது. பேச்சோவெனின் ஒலிவடிவை மாத்திரம் புலப்படுத்துகிறது. இதனல், இது நிகழ்காலத்திற் பேசப்படும் நேரத்திற்கு மாத்திரம் உரியது; பேச்சைக் கேட்பவர்கள் மாத்திரம் அதனல் பயனடைவர். குறித்த சிலர் கேட்ட பேச்சு எதிர்காலத்திற்கும் பிறர்க்கும் பயன் பட வேண்டுமாயின் அஃது எழுத்து வடிவத்தை அடைய வேண்டும் என விரும்புவர். ஏனெனில், எழுத்து வடிவமே ஒரு மொழியின் இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்துக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் உடையது. ஆதலினற்றன் அடிப்படையான வேறு பாடு எழுத்து வழக்குக்கும் பேச்சு வழக்குக்கும் உண்டாகிறது.

ஒரு மொழி வழங்கும் பெருநிலப் பரப்பின் பல பிரிவுகளிலும் பலவிதமான தொழில்களைச் செய்து வாழும் மக்கள் தத்தம் சூழல், கல்வி, தொழில் முதலியவற்றிற் கேற்பப் பலப் பலவிதமான பேச்சுக் களை உடையவர்களாயிருப்பதை நாம் காண்கிறேம். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் 'சேரி மொழி', 'குழூஉக்குறி' என்று குறிப்பிடப்பட்டனவற்றை ஈண்டு நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கும், தென் இந்தியத் தமிழ் மக்களுக்குமிடையிற் பேச்சு வழக்கில் எவ்வளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. பின் வரும் உரையாடலைப் பாருங்கள்.

மதுரை நகரிலுள்ள ஒரு துணிக்கடைக்கு (ஜவுளிக்கடை யென்பர்.) யாழ்ப்பாணத்தவ ரொருவர் செல்கின்றுர்.

யாழ்ப்பாணத்தவர் :— சால்வை இருக்கா ?

விற்பவர் :— வாங்க சார், சால்வையா ஒன்றும் புரியவில்லையே !

யாழ் :— (தாம் அணிந்திருக்கும் சால்வையைக் காட்டி) இது தான் நான் கேட்பது.

விற்பவர் :— அங்கவஸ்திரமா, பலதினுசு இருக்கிறது; கொற்றஞ பட்டா வேணும் ?

யாழ் :— சேலம் சால்வை யில்லையா ?

விற்பவர் :— இருக்குதுங்க, (சிலவற்றைக் காட்டி) இதோ பாருங்க, இது இரண்டரைக் கஜம், இது மூணு கஜம்.

யாழ் :— என்ன ஐயா, கஜம் என்கிறீர்களே, அது யாரா ?
விற்பவர் :— 'யார்' என்றால் என்ன சார், இரண்டு முழம் ஒரு கஜம்.
யாழ் :— விலை யென்ன ?
விற்பவர் :— ஜதை பத்து ரூபா பதினாலு அணா. கரூர் விலை.
யாழ் :— (சிறிது யோசித்துவிட்டு) ஜதை என்றால் சோடியா ?
விற்பவர் :— ஆம் சார் இரண்டு.
யாழ் :— குறைத்துக் கொடுக்க முடியாதா. அறுபது சதம் தள்ளிக் கொடுங்களேன்.
விற்பவர் :— ஜாஸ்தியில்லை சார், கம்மிதான், அறுபது சதம் எத்தனை அணா சார்.

இச்சிறு சம்பாஷணையில் மதுரை வியாபாரியர் உபயோகித்த ' அங்கவஸ்திரம், தினிசு, கஜம், கரூர், கம்மி, ஜாஸ்தி ' முதலிய சொற்கள் யாழ்ப்பாணத்தில் வழங்காதன. ' சால்வை, யார், சதம் ' முதலிய சொற்கள் மதுரையில் வழங்காதன.

இலங்கையிலும், யாழ்ப்பாணத்தில் வழங்கும் பேச்சுத் தமிழுக்கும் மட்டக் களப்பிலுள்ளதற்கும் பல வேறுபாடுகள் உள. யாழ்ப்பாணத்தில் கஷ்டம் என்பது குறிக்கும் பொருளை மட்டக்களப்பில் பொறுப்பு என்பதுணர்த்தும். யாழ்ப்பாணத்திலுள்ள பல ஊர்களில் ஓர் ஊரிலுள்ள சொல்லை இன்னொரூரில் காண முடியாது. சில ஊர்களில் 'அகப்பை' வேறு சில ஊர்களில் 'ஏப்பை' ஆகிறது; 'பணுவில்' உமிழ் என வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட புகுதி வழக்குகளே எழுத்துக்கும் பேச்சுக்குமுள்ள வித்தியாசத்தை, மேலும் மேலும் பெருகுவிப்பன. இம்மாறுபாடுகள் ஏற்படுவது மொழி வளர்ச்சியின் கிளர்ச்சியைக் காட்டுமன்றிச் சிலர் கருதுவதுபோல் மொழியின் வளர்ச்சிக்குத் தடையாகாது.[1] மக்களைப் போலவே மொழிகளும் வளர்ந்து கொண்டு வருகின்றன. உலகிலுள்ள எல்லாமொழிகளிலும் எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் தம்முள் வேறுபாடுடையனவாகவே காணப்படுகின்றன. சில மொழிகளில் இவ் வேறுபாடு சிறிதாகவும் சிலவற்றில் பெரிதாகவும் இருக்கும். இவ் வேறுபாடு மொழிகள் தோறும் வேறுபடுவதற்குக் காரணங்கள் மொழிகளின் அமைப்புமுறை, இலக்கண வரம்பு, இலக்கிய வளம் முதலியனவல்ல; சுவாத்தியம், சூழல், வாழ்க்கைமுறை, மொழி வழங்கும் நிலப்பரப்பின் அளவு, போக்கு வரவு வசதிகள், பிற மொழியாளரோடு கலக்கும் அளவு, அரசியல், வியாபாரம், புதியன காண்டல் முதலிய புறத் தொடர்புகளே. இவற்றினால் ஏற்படும் மாற்றங்கள் தோன்றாவிடின் மொழி வளர்ச்சி அடையாது. வளர்ச்சி இல்லையெனின் நாளடைவில் சுருங்கிப் பேச்சு வழக்கற்றுப் போய்விடும். மற்று இம் மாற்றங்கள் அளவுக்கு மிஞ்சிப்பல்கின், மொழி பல கிளைகளாகப் பிரியத்தொடங்கி விடும். ஆகவே மொழி வளர்ச்சியில் கருத்துடையோர் இம் மாற்றங்களை முற்றும் எதிர்த்தல் பொருந்தாது. இக்காலத்தில் இம் மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பாட்டுப் பெட்டியும், வானொலியும்

1. English in the future page 23—Nelson.

மிக்க உதவி செய்கின்றன. எனினும், இவற்றை அளவுப்படுத்தி ஒரு மொழிக்கு உறுதியையும் அழகையும் கொடுப்பது இலக்கியப் பண்பும், மொழி மரபும் கலந்தொளிரும் எழுத்து வழக்கேயாகும். பேச்சு வழக்குக் கட்டுப்பாடற்றது; முயற்சிச் சுருக்கம் காலச்சுருக்கம் காரணமாக வேறுபாட்டைவது. இவ் வேறுபாட்டை எப்பொழுதும் குறைத்துக்கொண்டு வருவது எழுத்து வழக்குத்தான் என்பது அறிஞர் கண்ட முடிபாகும்.

ஆகவே எழுதுவதுபோற் பேசுவது பொருத்தமற்ற தென்பது புலனாகிறது. இதுபோன்றே பேசுவதுபோல் எழுதுவதும் பொருத்த மற்றதே. இந்த உண்மையை உணராது இவ்விரு வழக்கையும் ஒன்றாக்க முயல்வது அறிவின்பாற்பட்டதன்று.

இக்காலத்துப் பிரயாண வசதிகளும், வானொலியும், பேசும் படங் களும் வெவ்வேறு இடங்களிலுள்ள மக்களுடைய பேச்சுக்களிற் காணப்படும் வேறுபாடுகளை நீக்குவதற்குப் பேருதவி செய்கின்றன. சொற்களைச் சொற்றொடர்களை மாத்திரமன்றி, ஒருவர் பேசும்மாதிரி, அவருடைய உச்சரிப்பு, முதலியவற்றையும் நாம் அறிந்து கொள்வ தற்கு வானொலியும் பாட்டுப் பெட்டியும் இப்பொழுது துணைபுரி கின்றன. எதிர்காலத்தில் ஒலிவடிவத்திலே நாம் நூல்களைக் கற்கத் தக்கதாக ஏற்படலாம். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் வரையும் எழுத்து வழக்கின் முதன்மையும், பேச்சு வழக்கினை அது பாதிக்கும் அளவும குறையாது சிறந்தே விளங்கும். நாடக நூல்களில் மக்கள் ஒருவரோடொருவர் பேசுவதுபோல் எழுதப்பட்டவற்றை நாம் படிக் கிறோம். இப்பேச்சுக்களின் போக்கு, வழக்குகள் முதலியனவே நம்மை மகிழச் செய்கின்றன. ஆனால் அவற்றைப்போல் நாம் பேச வேண்டுமென்று விரும்புவதுமில்லை, முயல்வதுமில்லை.

நாடோறும் எளிமையாக நாம் பேசும்பொழுது பேச்சின் நடையைக் கருதாது, நமது கருத்தை மாத்திரம் நன்கு புலப்படுத்த முயல்கிறோம். ஆனால், ஒரு மேடையில் ஏறி ஒரு பேச்சை நிகழ்த்தும் பொழுது எங்கள் வீட்டுப்பேச்சு சுயபேச்சு எங்கேயோபோய் விடுகிறது. புதுமுறையில் திருத்தமாக (எழுதுவதுபோல்) பேசு கின்றோம். வீட்டுப் பேச்சைப் பேசினால் அதனைக் கேட்டுக்கொண்டி ருக்கும் சபையாரே "கொல்" என்று நகைத்துவிடுவார்கள். ஒரு சபையில் பேசும்படி கேட்டால், வீட்டில் நன்றாக 'வம்பளக்கிறவர்கள்' தாமும் 'முடியாது' என்று கூறுகின்றார்கள். காரணம் யாது? மேடைப் பேச்சுக்குப் பயிற்சியும், மொழி அறிவும் இன்றியமையாது வேண்டப்படுவதுதான்.

மேடைப் பேச்சுக்கே இவ்வளவு பழக்கம், வேண்டியிருக்கிற தெனின் எழுத்துக்கு எவ்வளவு முயற்சியும் பயிற்சியும் மொழியறிவும் தேவைப்படும்! ஒரு நாட்டிலுள்ள மக்களுள் ஊமையர்கள் தவிர்ந்த மற்றவர்கள் யாரும பேசித்தான் தம் வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆனால் இவர்களிற் பலருக்கு எழுதத் தெரியாமலிருக்கிறது. ஒரு சிலரே எழுத்தாளர்களாக விளங்குகிறார்கள். இச் சிலரும் பன்னாட் பயிற்சியினாலேயே இவ்வாற்றலைப் பெறுகிறார்கள். இப்பயிற்சியுடன்

மாத்திரம் நின்றுற் போதாது. பழைய எழுத்தாளர்களோடு—அவர்களுடைய நூல்களோடு—பழகியுமிருக்க வேண்டும். இவ்விரண்டு துறையிலும் நிரம்பாத சுயநலப் புலிகளே சாதாரணமாகப் பேசுவது போல் எழுத வேண்டும் என்று வாதிப்பவர்கள். நிற்க.

இக்காலத் தமிழ் எழுத்தாளர் பலரிடம் காணப்படும் குறை அவர்களுடைய பயிற்சிக் குறைவும் பழைய எழுத்தாளர்களோடு பழகிக் கொள்ளாமையுமே. சில பத்திரிகைகளுக்கு இரண்டொரு விஷயங்களை அனுப்பி வெளிப்படுத்திவிட்டுத் தாமும் சிறந்த எழுத்தாளர் என்று சிலர் எழுத்தாளர் மாநாடுகளுக்கு 'விஜயம்' செய்கின்றனர். எழுத்தாளர் நாட்டில் பேசும் பேரெழுத்தாளர்கள் சிலர் 'பழைமையைத் திரும்பிப் பார்த்தால் கல்லாய்ப் போய்விடுவீர்கள்' என்று புத்தி புகட்டுகிறுர்கள்.

சித்திரம் தீட்டல், வீணையியக்கல், இசைப் பாட்டுக்களைப்பாடல் போல், நூல்களை எழுதலும் ஒரு கலையே. கலைகளை முறையாகக் கற்றுப் பயிலாமல் கலைஞானிகளாகி விட முடியாது. இதனுலேயே எழுதி எழுதிப் பயிலாமல் எழுத்தாளர்களாக முடியாது என்று மேனுட்டு அறிஞரும் கூறுகின்றனர். [2]

ஒவ்வொரு மொழியிலும் சிறந்து விளங்கும் இலக்கியங்களைச் செய்தவர்கள் எல்லாரும் சிறந்த எழுத்தாளர்களே. இந்த இலக்கியங்கள் பாட்டு வடிவத்திலும் உரை வடிவத்திலும் காணப்படுகின்றன. எல்லா மொழிகளிலும் தொடக்கத்திற் பாட்டு வடிவத்தில் இலக்கியங்களை எழுதினுர்கள், காலஞ் செல்லச் செல்ல உரை வடிவத்திலும் எழுதத் தொடங்கினுர்கள். இக்காலத்தில் உரை நூல்களே பலகி வருகின்றன. இக்காலத்தில் இலக்கியங்களை ஆக்குகிறவர்கள் அவற்றை முற்காலத்திற் செய்தவர்களைப்பற்றியும் அவர்களுடைய ஆக்கத் திறங்களைப்பற்றியும் நன்கு அறிந்திருத்தல் வேண்டுமன்றோ! சிறந்த தமிழ் எழுத்தாளர்களாவதற்கு முயல்பவர்கள் பழைய தமிழ் எழுத்தாளர்களுடைய இலக்கியங்களை நன்கு படித்து, அவற்றில் போதிய பழக்கமுள்ளவர்களாக இருத்தல் இன்றியமையாதது. பழைய இலக்கியங்களுடன் நன்கு பழகுதல் புதியன காண்டற்கும், புத்தப் புதிய கருத்துக்களைக் கொள்வதற்கும் உதவியாயிருக்கும். [3]

தமிழ் நாட்டில் இக்காலத்தில் 'நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக' வளர்ந்து வரும் உரைநடை இலக்கியங்களை ஆக்குபவர்களிடத்து இவ்விரண்டு குறைகளும் (பயிற்சிக் குறைவும், இலக்கியப் பழக்கக் குறைவும்) காணப்படுகின்றன. இவற்றை நீக்கிய பின் இலக்கியங்களை எழுதுவார்களாயின் அவை எக்காலமும் பயன்படும் இலக்கியங்களாக இருக்கும் என்று கூற வேண்டியதில்லை. இவர்களும் பழைய எழுத்தாளர்களோடு—இலக்கிய ஆசிரியர்களோடு—சேர்த்துப் போற்றப்படுவார்கள்.

---

2. Art of writing Lecture II—Quiller Conch.
3. The more extensive. therefore, your acquaintance is with the works of those who have excelled, the more extension will be your powers of invention, the more original will be your cenceplions'— Sir Jashua Reynolds.

புறப்பொருட் பூக்கள்

திரு. மா. சிவகுருநாதன், ஆசிரியர், சுந்தரப்பெருமாள்கோவில்.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் க, பக்கம் 32)

அதற்கடுத்தது கொய்யணி மலர்களின் சோலை ஒன்று நம் தமிழ் மாணவர்கள் கண்டுணர வேண்டும் முறையில் புதிதாய்ப் பயிராக்கப்பட வேண்டியிருக்கிறது. பொருள் இலக்கணத்திலும் இன்னும் மற்றைய தமிழ் இலக்கியங்களிலும் கூறப்படும் பூக்கள் பல உள்ளன. இவைகள் அனைத்தினையும் நேரில் கண்டவர்களைப் பெரும்பாலும் காண்டல் அரிது, ஆதலின் இவ்வகைப் பூக்களை யாவரும் கண்டுணரத் தோட்டம் ஒன்று வேண்டும்.

இவ்விதப் பூஞ்சோலையினை முதலில் பயிர் செய்வது எளி தன்று. இதற்கு மிக்க பொருட் செலவும், உழைப்பும், கால நீடிப்பும் ஆகும். இவ்வாறு ஆனபோதிலும், பின்னர் அதன் பயனை யாவரும் உணர்ந்து களிக்கும்போது முதலில் எடுத்துக் கொண்ட உழைப்புப் பெரிதாய் இராது. ஆனால் இக் காலத்து இப் பூக்களின் தொடர்பான தோட்டமொன்றை முதலில் நம் தென்றமிழ் நாட்டில் எங்கேனும் ஓர்பெருநிதி படைத்த கல்லூரி யில் முதலில் தோற்றுவிப்பின் பின்னர் அதனைக் கண்டு அதன் வாயிலாக மற்றைய கல்லூரிகளில் பயிர்செய்து கொள்வது மிக்க எளிதாகும். ஆதலின் தமிழார்வமிக்க தமிழ் நாட்டுச் செல்வர்கள் இதனைச் செய்வார்களாக.

இனி இதனடியில் யான் அறிந்த சில புறப்பொருட் பூக்களைப் பற்றி எடுத்துரைக்கின்றேன்.

வெட்சி :—முற்காலத்தில் தமிழ் அரசர்கள் எவரேனும் வேற்று நாட்டினைக்கொள்ள அமராடச் செல்வதன்முன், அந்நாட் டில் அறநெறி நின்றொழுகும் மக்களையும், பசுக்களையும் எச்சரித்து அப்புறப்படுத்துவர். இவ்வித எச்சரிக்கையினை உணர்ந்து வெளி யேறமாட்டாத பசுக்கூட்டங்களைத் தம் படையினரை விட்டுக் கவர்ந்துவரச் செய்வார்கள். அப்போது அவர்கள் இவ்வெட்சிப் பூவினைச் சூடிச்சென்று கவர்ந்து வருவார்கள். இவ்வாறு பசுக் கவர்தல் வெட்சி எனப்படும். இவ்வாறே இப்போரின் ஒவ்வோர் நிகழ்ச்சிக்கும் வெவ்வேறு வகைப் பூவினைச் சூடுவர். அந் நிகழ்ச்சிகள் அப்போது அவர்கள் அணியும் பூவின் பெயராலேயே வழங்கப்படும்.

இவ்வெட்சி தற்காலத்து விச்சி, விருச்சி என வழங்குகிறது. இது ஓர் சிறுமரம். இம் மரம் நீர்க்கசிவுள்ள வாய்க்கால், குளக்

கரை ஓரங்களில்தான் மிகுதியாய்க் காணப்படும். இதனை அடிக்கடி வெட்டிவிடுவர். அதனால் இவைகள் தற்காலத்தில் எங்கும் மரமாய் வளராது கொத்துக் கொத்தாய் இருக்கும். இப்பூக்கள் குருதி நிறமுடைய பூக்கள், கொத்தாய் இருக்கும். பலபூக்கள் ஒரே காம்பில் ஒரே தடவையில் மலராது, இரண்டு மூன்று நாட்களில் மலரும். யாவும் மலர்ந்தபின் இப்பூங்கொத்து மிக்க அழகாய் இருக்கும்.

அதாவது இக்கொத்தில் உள்ள ஒவ்வொரு பூவும் சுமார் இரண்டு அங்குலநீளமும் ஓர் சிறு ஊசிக்கனத்தில் உள்ள சிவந்த காம்பின் உச்சியில் நான்கு மூலைகளை உடைய ஒரே இதழினைப் பெற்றிருக்கும். இப்பூவினுக்கு நல்ல அழகு இருந்தும் மணம் இல்லாதிருக்கிறது. இப்பூக்களைப்பறித்துமாலைகளாய்த்தொடுத்தது பெரும்பாலும கோயில்களில் தெய்வத் திருவுருவங்களுக்கு அணிவிக்கப்படுகிறது. இப்பூக்களுக்குக் காய்கள் இல்லை. இதனைப் பயிராக்க விரும்புவோர் விரல்கனமுள்ள இதன் கிளைகளைவெட்டிப் பூமியில் வளைத்துவைத்துப் பயிராக்குவர். இச்செந்நிற வெட்சியே பசுக்கவரும் செயலுக்கு உரியது எனக் கருதியறிய வேண்டியிருக்கிறது.

இச்செந்நிற வெட்சி அமைப்பில் வெண்ணிறவெட்சி ஒன்றிருக்கிறது. இது சற்றுச் சிறிதாய் இருக்கும்.

இப்பூவின் பெயரை உடைய கொடி ஒன்றுண்டு. இப்பூக்கள் மலரும்போது சிவந்து பின்னர் நாளடைவில் வெளுத்து உதிரும். முதலில் கூறிய பூக்களைவிட மூன்று பங்கு பெரிதாய் இருக்கும். இக்கொடியினை இக்காலத்து மாளிகையின் முகப்பிலும், பூந்தோட்ட வாயில்களிலும அழகுக்காகப் படர வைத்திருக்கின்றனர்.

முதலில் கூறிய செந்நிற வெட்சி அநேகமாய் ஆண்டு முழுவதிலும் கிடைப்பினும், ஆனி முதல் கார்த்திகைக் கடைசி வரையில் மிகுதியாய்க் கிடைக்கும.

கரந்தை :— முதலில் பகைமேல் செல்லக் கருதிய அரசன் பசுக்களை கவர்ந்து வந்தபின் அவற்றைப் பறிகொடுத்த மன்னவன் வெகுண்டு தன் படையினரை ஏவி மீட்டு வரச்செய்வான். அப்போது அவர்கள் 'கரந்தை' என்னும் பூவினைச் சூடிச் செல்வர்.

இப்பூவில் சிவகரந்தை, விட்டுணுகரந்தை என இருவகை உள. இப் புறப்பொருளுக்கு உரியது பூடு. இது சுக்கான் பூமியிலும், மழையற்ற வறண்ட இடங்களிலும் காணப்படும். இதன் இலைகள் அரை அங்குல அகலமும், மூன்று அங்குல நீளமும் இருக்கும். இவ்விலையின் கணுச் சந்துக்களில் ஓர் சவுக்கைக்காய் அளவில் பசுமை நிறத்துடன் இப்பூக்கள் இருக்கும. இது பார்வைக்கு

ஓர் சிறு கொட்டையைப்போல் இருப்பதால் இதனைக் கொட்டைக் கரந்தை என்றும் கூறுவர். இது மற்றப் பூக்களைப்போல் இதழ் இதழாய் இராது; வண்ண நூலால் ஆகிய ஓர் மட்டைப்பந்தின் (Badmintan ball) தோற்றத்தை ஒத்திருக்கும். இதன் இலைகட்கும் பூக்கட்கும் ஒருவித மணமுண்டு.

இவ்விலைகளும் பூக்களும் சிவபெருமானுக்கு மிக்க உரியன. மாசித் திங்களில் வரும் சிவன்இரவு அன்று, இவ்விலைகளால் சிவ பெருமானைச் சைவர்கள் வழிபடுவர். அக்காலங்களில் இவை மிகுதியாய் முளைத்திருக்கும்.*

இக்கரந்தை, அம்மையப்பராகிய சிவபெருமானுக்கு மிக உரிய தென்பதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் என்னும் திருப் பதியில் உள்ள பரவையுண் மண்டளி என்னும கோயில் தேவாரத் தில் 'கரந்தையும் வன்னியும் மத்தமுங் கூவிளமும் பரந்த சீர்ப் பரவை மண்டளி அம்மானை' எனக் கூறுகின்றார்.

இச்செடியினைப் பயிர்செய்ய விரும்புவோர் அதன் கிளையினை ஓர் சாண் நீளத்தில் ஒடித்துப் பதிகம் போடுவர்.

விட்டுணுகரந்தை என்னும் பூ சிறிதாய் நீலநிறமாய் இருக் கும். இச்செடி தரையோடு தரையாய்ப் படர்ந்திருக்கும். இவ்விரு கரந்தையினையும் இக்காலத்தில் சிவ கரண்டி, கிருஷ்ணன் கரண்டி என விபரீதமாய் அழைப்பர்.

வாகை :— போரின்மேற் சென்று வெற்றிகொண்ட படையினர் அணிந்துகொள்ளும் பூ இதுவாகும். முருகப்பெருமான் சூர ராதியரைவென்று வெற்றிகொண்டதை 'பானு, பகைவன் முதலாய பாலருடன் சிங்க, முகனை வென்று வாகை முடித்தோய்' எனக் கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் கூறுகின்றார்.

இது ஓர் பெருமரம். இம் மரத்தின் மேல்பாகம் வெண்மை யாய் இருக்கும். மிக்க உறுதியானது. இதன் அடி மரத்தால் பெருந்தேர்களுக்கு அச்சும், செக்குக்களுக்கு வலம்பையும் போடு வார்கள். இதன் இலைகள் ஒரே காம்பில் பல சிறு இலைகளை அடையப் பெற்ற பின்ன இலைகளாகும். பூக்கள் வெட்சியைப்போல் ஒரே காம்பில் பல பூக்களை உடையதாய் நுனியில் குஞ்சங்களுடன் அழகாய் இருக்கும், நன்மணம் இராது. காய்கள் சுமார் அரை அடி நீளமும், அரைக்கால் அடி அகலமும் உள்ளதாய், மெலிந்து சப்பையாய், தோற்றத்தில் ஓர் அவரைக்காயினை ஒத்திருக்கும்.

---

* கொள்ளிடப் போராற்றின் வடகரையில் உடையார்பாளையம் தாலுக் காவின் தென்பக்கம் சில சிற்றூர்களில் இக்காலத்தில் இவை மிகுதியாய்க் காணப்படுகின்றன.

இம் மரங்கள் எவராலும் பயிர் செய்யாமலே அதன் வித்துக்கள் காற்றில் பறந்து விழுந்திட, செடிகளாய்ப் பின் பெருந்தோப்புகளில் வளர்ந்து வருவன.

தும்பை :— பகைவர்மேல் போர் புரியத் தொடங்குவோர் இப் பூவினைச் சூடுவர். இதில் பலவகை உண்டு. இப் புறப் பொருளுக்கு உரிய பூ ஒருவகைப்பூண்டு ஆகும் எனக்கருதவேண்டியிருக்கிறது. இதன் இலைகள் சிவகரந்தையின் இலைகளைப்போல் இருக்கும். செடியின் நுனியில் பார்வைக்கு ஓர் பன்னீர்க் காயைப்போன்ற பல பூக்களுக்கும், விதைகளுக்கும் பிறப்பிட மாய பாகம் ஒன்றுண்டு. இதில் ஒரே இதழ் உள்ள பல பூக்கள் பூக்கும். இவை மிக்க வெண்மையாய்ப் பார்வைக்கு பச்சரிசிச் சோற்றினை ஒக்க இருக்கும். இப் பூக்கள் உதிர்ந்த பின் அதன் அடியில் சிறு கருப்பு விதைகள் தெரித்துவிழும்.

இப்பூக்கள் சிவ வழிபாட்டிற்கு உரியது எனச் சைவ மக்களால் கொள்ளப்படும். தில்லையில் கூத்தாடும் கண்ணுதற்கடவுளை முத்துத் தாண்டவர் என்னும் தமிழ்க்கவிஞர் ‘கொன்றை, தும்பை அணிந்து மருந்து’ என சிறப்பிக்கின்றார். இராமலிங்க அடிகளார் திருத் தணிகை வாழ் சிவகுமாரனுக்கு ‘தும்பைக் குடலை எடுக்காமல் துக்க உடலை எடுத்தேனே’ என்று இப்பூவினை எடுத்து இறைவனை வழிபடாமைக்கு வருந்துகின்றார்.

இச்செடியின் இலை பல நச்சுக் கடிகளுக்கு உடன் பிறவா மருந்தாய் இருக்கிறது. புன்செய்ப் படுகை ஓரங்களில் இப் பூண்டுகள் பனிக்காலத்தில் அதிகமாய் காணப்படும்.

காசித் தும்பை என்று மற்றொன்று உண்டு. இது ஓர் தண்டு போன்ற சிறு செடி. இலைகள் நீண்டு ஓரம் அரம்பப்பல்போல் செட்டராய் இருக்கும். பூக்கள் சிறிதாய் கிண்ணம் போலும் அதன் மற்றொரு பாகம் கொக்கிபோல் வளைந்தும் இருக்கும். இதில் சிகப்பு, வெள்ளை, நீலம், வெண்சிகப்பு முதலிய பல நிறங்கள் உண்டு. இதன் காய்கள் முற்றிய பின் தானே வெடிக்கும். அப்போது அதனுள் உள்ள கடுகு போன்ற சிறுவிதைகள் பூமிக்குள் அழுந்தி, ஆனி, ஆடித் திங்கள்களில் செடியாய் முளைத்துப் பின் பூக்கும். இப் பூக்கள் தெய்வ வழிபாட்டிற்குப் பயன்படுவனவாகும்.

(40-ம் பக்கத்தொடர்ச்சி)

முதற்பொருளும் அசோகமரமாகிய கருப்பொருளும் புணர்தலாகிய உரிப்பொருட்குத் துணையாய் நின்று சிறப்புச்கொடுத்தலை விளக்கிய வாறு காண்க. முறை தெரித்தாங்கு தழீஇயது என இயைக்க. இங்ஙனமன்றித் தெரித்தாங்கு மலர்ந்த என இயைத்துத் துயர் செய்தற்கு அசோகத்தை வினைமுதலாக்குவாருமுளர். அங்ஙனம் கூறின் குறிஞ்சி நிலத்திற்கும் உரிப்பொருட்கும் யாதும் இயைபின்றிப் போதலோடு முதலுங்கருவும் உரிப்பொருட்டுத் துணையாய் நின்று சிறப்பிக்கு முறை பெறப்படாதொழியும். மேலும் ஏனைய திணைகளில் நிலங்களை யெழுவாயாக்கிக் கூறும் கச்சியப்பமுனிவர் கருத்தொடு மாறுகொளக் கூறலாய் முடியுமாதலின் பொருந்தாதென்க. புணர்தலாகிய உரிப்பொருள் நிகழ்தற்கிடமாகிய குறிஞ்சிநிலமே புணர்தலின்பத்தை மிகுவிக்க முன்னர்த் துயர் செய்தற்குரிமையுடையது. அவ்வுரிமை முறையை அணைத்துணவு நீக்கு மசோகைத் தன்பாற் கொண்டு குறிப்பாலுணர்த்தியது என்பது கருத்து.

'பிரிந்தவர் பசலையம் பெரிய போர்வையுள்
திருந்துவர் என்னத்தன் செய்கை தோற்றியாங்கு
அரந்தைசெய் மதன்கணை யாகப் பூத்தமா
மரந்தழீ யதுநலம் வளாய பாலையே.' (த-நா-58)

"தலைவரைப் பிரிந்த மகளிர் பசலை நிறமாகிய அழகிய பெரிய போர்வையுள் தங்கி நலம் வேறுபடுவர்" என்று தன் செய்கையை யுலகர்க்கறிவித்தாற்போலத் துன்பஞ் செய்கின்ற மதன்கணையாக மலர்ந்த மாமரங்களைத் தழுவி யுள்ளது நலம் சூழ்ந்த பாலை நிலம் என்பது பொருள். "தோற்றியாங்கு தழீஇயது பாலை" என இயைக்க. பாலை நிலத்தின் செயலாவது பிரிவுத்துயரை மிகுவித்தலாகும். பிரிவினுல் பசலையுண்டாதலியல்பு. 'உவக்ககாணெங் காதலர் செல்வா ரிவக்காண்என்—மேனி பசப்பூர் வது" (1185) என்றது காண்க. இங்ஙனம் பிரிவுத்துயரை மிகுவித்துப் பசலையுண்டாக்கும் தன்செயலை யுலகர்க்கறிவிக்க வேண்டுமாயின் பாலை நிலம் குறிப்பானன்றிக் கூறவியலாது. எனவே பசலையுண்டாக்கு மியல்பையுடைய மதன் கணையாகிய மலர்பூத்த மாமரத்தைத் தன்பால் கொண்டு அச்செயலைக் குறிப்பாலுணர்த்திற்று என்பது கருத்து. இதன்கண் பாலை நிலமாகிய முதற்பொருள் மாமரமாகிய கருப்பொருளைக் கொண்டு பிரிவாகிய உரிப்பொருட்குத் துணையாய் நின்று சிறப்பித்தவாறறிக.

இனி, மகளிர் தமித்து இல்லிருக்குங்கால் படுக்கையில் கிடப்பதன்றி வேறு நிகழ்ச்சியில்லை யென்பதைத் தெரிவிப்பது போல மன்மதன் கணையுள் ஒன்ருகிய முல்லைமலர்களையுடைய முல்லைக் கொடியைத் தாங்கியுள்ளது முல்லை நிலம் என்று கூறுகின்ருர். (த-நா-79) முல்லை கிடைகாட்டும் என்பதறிக. இதன்கண் இல்

லிருத்தலாகிய உரிப்பொருள் சிறப்பெய்த முல்லைக் கொடியும் முல்லை நிலமும் துணையாயவாறு காண்க. இல்லிருக்கு மகளிர் படுக்கையில் கிடப்பதே இயல்பாதலும் அங்ஙனம் கிடத்தற்கு முல்லைமலர்க் கணையும் முல்லைநிலமும் காரணமாய் நின்றதுமறிக. இல்லிருக்குங்கால் மகளிர் படுக்கையில் கிடக்குமாறு செய்யும் தன் செயலைக் கிடை காட்டும் முல்லையைக் கொண்டு முல்லை நிலம் குறிப்பாலுணர்த்திய வாறு.

இனி, தலைவர் தலைவியரைப் பிரிந்து பரத்தையரிடத்துச் சாரும் பொழுதும் அது காரணமாகத் தலைவியர்க்கு வருமூடலினும் அவ் வூடலையுணர்ந்து தலைவர் உணர்த்தும் பொழுதும் ஒழியாது எழுகின்ற நினைவு பொருந்துதற்குக் காரணமான தனதியல்பை யுலகிற்குத் தெரி வித்தாற்போல மதன் கணையாய் நினைக்கச்செய்கின்ற தாமரைமலரைத் தன்பாற்கொண்டு விளங்கும் மருதத்திணை என்கின்றூர் (135) மருத நிலம் ஊடலினும் ஊடல் நிமித்தத்தினும் நினைவுகள் பொருந்துதற் குக் காரணமான தனதியல்பை நினைப்பிக்கு மரவிந்தத்தைக்கொண்டு குறிப்பாலுணர்த்தியவாறு. இதன்கண் ஊடலாகிய உரிப்பொருட்கு மருதமாகிய நிலமுதற்பொருளும் தாமரையாகிய கருப்பொருளும் துணையாய் நின்று சிறப்பித்தவாறறிக.

இனி, சாதல் போன்ற தளர்வைச் செய்கின்ற தம்முடைய இயல்பை யுலகிற்குக் காட்டுதற்காக மன்மதன் கணையாதல் தன்மை யுடைய நெய்தல் மலரைத் தம்பால் கொண்டுள, நெய்தல் நிலங்கள் என்கின்றூர். (152) இரங்கலாகிய உரிப்பொருள் நிகழுங்கால் சாதல் போன்ற துயரைச் செய்வது நெய்தல் நிலம்; அச்செயல் முறையைக் கொல்லுங் குணமுடைய நீலமலரைத் தாங்கி நின்று குறிப்பா லுணர்த்துகின்றதென்க. "கொல்லுமதனம்பின் குணம்" என்புழிக் கொல்லுதல் என்பது கொன்றாற்போன்ற வருத்தம் என்பதேபொருள். இதன்கண் இரங்கலாகிய உரிப்பொருளுக்கு நெய்தல் நிலமாகிய முதற் பொருளும் நீலமலராகிய கருப்பொருளும் துணையாய் நின்று சிறப்புக் கொடுத்தவாறறிக. இங்ஙனம், குறிஞ்சி முதலிய ஐந்திணையிலும் அசோகு முதலிய ஐங்கணைகள் கருப்பொருளாய் அமைந்துள்ள வனப் பைக் கற்பனையால் காரணங்காட்டி விளக்கியிருக்கின்றூர் நம் கச்சி யப்ப முனிவராம் கவியரசர்.

---

*சாசனங்கண்ட தமிழ்

திரு. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

தமிழ், பல்லாயிரம் ஆண்டுகளாகப் பயின்ற மொழி. மக்களின் பேச்சு மொழியுமாகும்; இலக்கண வரம்புகள் நிரம்பியது. மொழியின் தொன்மையும் குன்றா இளமையும், அதன் சீரிய இலக்கியங்களாலும் அவற்றிற்கு உரை எழுதிய உரையாசிரியர்களது உரைகளாலும் உணரலாம். இன்னும நீண்ட காலப் போக்கில் பல அரச பரம்பரைகள் நமது நாட்டில் தோன்றியும் மறைந்தும், மற்றவை பின்னர் எழுந்திருப்பினும், மக்களின் மொழியும் அரசியல் மொழியும் ஒன்றாயிருந்தமையின், தமிழ், உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் இலக்கண வரமபிற்கு உட்பட்டு நடைபெற்றே வந்திருக்கிறது. இதனைத் தமிழ் இலக்கியங்கள் தவிர மற்றொன்றும் வலியுறுத்தும். அவை தாம பண்டைய அரசர்களாலும் பெருமக்களாலும், பல நூற்றாண்டுக் கணக்கான காலப் போக்கில், அவ்வப்போது, கற்பாறைகளின்மீதும், கோயிற் சுவர்கள் மீதும், செப்பேடுகளிலும், பொறித்து வைக்கப் பட்ட சாசனங்களாகும். தமிழச்சிறப்பினை உணர்ந்துகொள்வதற்குத், தமிழ் இலக்கியங்கள் எத்துணைப் பயனுடையவாக இருக்கின்றனவோ, அத்துணைப் பயனுடையனவாகவே இச்சாசனங்களும் உள்ளன.

இவை பெரும்பாலும் கோயில்களுக்கோ, தனிப்பட்ட கல்விமான்கள், பிராமணர்களுக்கோ, நிலங்களை இறையிலியாகத் தானம் வழங்குவதற்கும், மற்றும் பல்வேறு காரணங்களுக்கும ஏற்பட்டவையாகும்.

தமிழ் நாடு முழுதும் ஆங்காங்குக் கல்வெட்டுக்கள் காணப்படுவதாயினும், அறவோலை செய்தோர் பல கல்வெட்டுக்களில் ‘ சந்திராதித்யவன்ர செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டி காணியும் இறையிலியாக அனுபவிக்க ’ என்ற தொடர்களைப் பார்க்குமிடத்து ஒவ்வொரு கல் வெட்டிற்கும நகலாக அதன் செப்பேடுகள் இருந்திருக்க வேண்டுமெனவும் துணியலாம். இப்பட்டயங்கள் சிறிய அளவினதான பல செப்பேடுகளில் பொறிக்கப்பட்டு, அவ்வேடுகளிலுள்ள துளையில் செப்புக்கம்பியால் கோர்வையிடப்பட்டு, அதன் முடிப்பில் அரசாங்க இலச்சினை (Royal Seal) யும் தாங்கியிருந்தன,

(தொடரும்)

* சென்னை, அகில இந்திய வான் ஒலியில் 21—3—46-ல் பேசப்பெற்று, அந்நிலையத்தின் விசாரணைத் தலைவரது அனுமதி பெற்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை,

கரந்தைப் புலவர் கல்லூரி

இக் கல்லூரி தமிழவேள் த. வே. உமாமகேசுவரனுர் அவர்கள் தண்ணிய உள்ளத்திற் ேறான்றி, அவர்களின் தளரா முயற்சியால் வேரூன்றி, முத்தமிழ் வள்ளல், இராவு பகதூர், A. Y. அருளானந்தசாமி நாடார் அவர்களின் புரப்பினுலும், பிற செல்வர்களின் புரப்பினுலும, கடந்த எட்டாண்டுகளாகப் பணியாற்றி வருகின்றது. கல்விக் கின்றியமையாத அமைதியும் இயற்கை நலனும் தட்பமும் சூழ்ந்த இடத்தில் நிற்கின்றது இக் கல்லூரி. சீரிய ஆசிரியர்கள் மாணவர் முற்போக் கொன்றினையே குறிக்கோளாகக் கொண்டுழைக்கின்றனர். தனிப்பட்டமுறையில் ஒவ்வொரு மாணவரும் நம் கல்லூரியில் தாயன்புடன் பேணப் பெறுகின்றனர். தமிழ்க் கல்விக்கேற்ற இடம் இக் கல்லூரியே யாகும்

இக்கல்லூரியிற் சேர விரும்பும் மாணவர்கள், முக்காலணு அஞ்சற்றலையைக் கரந்தைப் புலவர் கல்லூரி எழுத்தாளருக்கு அனுப்பி, விண்ணப்ப மடல் பெற்று, விண்ணப்பங்களை, நன்னடக்கைச் சான்றுடன், நேரிலோ அல்லது அஞ்சல்வழியோ, 'எழுத்தாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்' என்னும் முகவரிக்கு 8-6-1946க்குள் அனுப்பவேண்டும், விண்ணப்பங்களை ஒப்பவோ தள்ளவோ, சங்கத்திற்கு முழு உரிமையுண்டு.

சங்கப் பொருள்நிலை இடந்தருமளவு வறுமையும், கல்வித் தகுதியுமுடைய மாணவர்க்கு இலவசஉண்டி அளிக்கப்பெறும். இலவச உண்டி பெற விரும்புவோர் வறுமைச்சான்று அனுப்ப வேண்டும்.

இக்கல்லூரியில் உயர்நிலை மூன்று வகுப்புகளும் (Advance classes) வித்துவான் வகுப்புகளும் (Entrance, Prelimenary and Final Vidwan Classes) நடைபெறுகின்றன.

கருந்திட்டைக்குடி,
9-5-46.

ஐ. குமரசாமி பிள்ளை,
எழுத்தாளர்.